Registered as a Newspaper

# உதயன்

விலை: ரூ. 1-25

உண்மை – அஞ்சாமை – நடுநிலைமை

சுடர்: 2 யாழ்ப்பாணம் பிரபவ ஹூ ஆனி மீ 16 உ செவ்வாய்க்கிழமை ஹிஜ்ரி 1407 ஜுல்ஹஃ பிறை 3 (30 — 06 — 1987) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர் 184

Your Friends in Finance
SHABRA
நிதித்துறையில் உங்கள் நம்பிக்கையுள்ள நண்பன்
SHABRA
Unico Finance Ltd.

Your Friends In Finance
SHABRA
நிதித்துறையில் உங்கள் நம்பிக்கையுள்ள நண்பன்
SHABRA
Unico Finance Ltd.

★ வடமராட்சி மக்களின் இதயங்கள் பேசுகின்றன ★

# பாதுகாப்பும், சுதந்திரமும் இங்கு இல்லை; கப்பலில் இந்தியா கூட்டிச் செல்லுங்கள்!

## பொறுத்ததோடு பொறுங்கள்; மிகக் குறுகிய காலத்தில் உங்களுக்கு விடிவு வரும்

## இந்திய செஞ்சிலுவைப் பிரதிநிதி தேற்றுதல்

(நேரில் சென்று எழுதுவோர்: க. இரத்தினராஜசிங்கம், மா. பேரின்பநாயகம்)

வடமராட்சி, ஜூன் 30

ஸ்ரீலங்கா இராணுவத்தின் கைப்பற்றப்பட்ட பிரதேசமாக விளங்கும் வடமராட்சியில் உள்ள மக்கள் இதயங்களைத் திறந்து நேற்றுப் பேசினார்கள்.

நிவாரண உணவுப் பொருள்களை விநியோகிப்பதற்காக அங்கு சென்ற இந்திய செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகளின் காலில் விழுந்து தங்களுக்கு ஏற்பட்ட அவலங்களைக் கூறிக் கதறி அழுதனர்.

தமக்கு இப்போது தேவைப்படுவது சுதந்திரமும் பாதுகாப்புமே என்று தெரிவித்த அவர்கள், நிவாரணப் பொருள் கொண்டு வந்த கப்பலில் தம்மை இந்தியாவுக்கு அழைத்துச் செல்லுமாறு கேட்டனர்.

அவர்களைத் தேற்றிய இந்திய செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகளில் ஒருவரான திரு. வேணுகோபால் "பொறுத்ததோடு பொறுங்கள். குறுகிய காலத்தில் உங்களுக்கு விடிவு பிறக்கும்" என்று கூறினார்.

ஈழத்தமிழர்கள் சுதந்திரத்துடனும், பாதுகாப்புடனும் வாழ்வதற்கு மிக விரைவில் வழி பிறக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

வடமராட்சியில் கரவெட்டி சென்அந்தனீஸ் தேவாலயம், வதிரி பரமானந்த ஆச்சிரமம் ஆகியவற்றில் தங்கியுள்ள அகதிகளை இந்திய செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் சந்தித்தனர்.

அப்போது தமிழ் அகதிகள் இந்தியப் பிரதிநிதிகளின் கால்களில் விழுந்து கதறி, அழுது தமக்கு ஏற்பட்ட இன்னல்களைத் தெரிவித்தனர்.

(4ஆம் பக்கம் பார்க்க)

## செய்தியாளர்கள் விசாரணையின் பின் விடுதலை

யாழ்ப்பாணம், ஜூன் 30

வடமராட்சிப் பகுதியில் நிவாரண உணவு விநியோகிக்கச் சென்ற இந்திய செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகளுடன் கூடச் சென்ற உதயன் செய்தியாளர்கள் இருவர் இராணுவ உளவாளியின் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர்.

மந்திகை வைத்தியசாலையில் செய்தி சேகரிப்பதற்காகச் சென்றிருந்த பொழுதே இவர்கள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர்.

சில மணி நேர விசாரணையின் பின் இவர்கள் விடுதலை செய்யப்பட்டனர்.

க. இரத்தினராஜசிங்கம், மா. பேரின்பநாயகம் ஆகிய இருவருமே விசாரணைக்கு உட்படுத்தப்பட்டவர்களாவர். (இ–10)

## பொலீஸுக்கும் சிகிச்சை

யாழ்ப்பாணம், ஜூன் 30

மந்திகை ஆஸ்பத்திரி வார்ட்டில் ஒரு பொலீஸ்காரரும் நோயாளியாக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இது பற்றி ஆஸ்பத்திரி தாதி ஒருவரிடம் கேட்டபோது 'பொலீஸ்காரர் கட்டி ஒன்று காரணமாக சிறு சத்திரசிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்' என்று கூறினார். (இ–10)

## ஒரு மாதமாக வடமராட்சி இருளில்

யாழ்ப்பாணம், ஜூன் 30

வடமராட்சி மக்கள் கடந்த ஒரு மாதத்திற்கு மேலாக மின்சாரம் இன்றி இருளிலேயே வாழ்கின்றனர்.

கடந்த மாதம் 26 ஆம் திகதி ஆரம்பமான இராணுவ நடவடிக்கைகள் காரணமாக இப்பகுதிகளில் மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது.

இரவு வேளைகளில் இராணுவம் வீதிகளிலும் வீடுகளுக்குள்ளாலும் ரோந்து செல்வதால் பொதுமக்கள் வீடுகளில் விளக்கு கொளுத்தவும் பயப்படுகிறார்கள். (இ–10)

## வடமராட்சியில் இந்திய நிவாரண பொருள் விநியோகம்

யாழ்ப்பாணம், ஜூன் 30

இந்திய நிவாரணப் பொருள்கள் ஸ்ரீலங்கா இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ள வடமராட்சி மக்களுக்கு நேற்று விநியோகிக்கப்பட்டன.

நேற்றுப் பகல் வடமராட்சிக்குச் சென்ற இந்திய–இலங்கை செஞ்சிலுவைச்சங்கப் பிரதிநிதிகள் இந்த உணவுப் பொருள்களை அகதி முகாம்களுக்குச் சென்று விநியோகித்தனர்.

சென்அந்தனீஸ் தேவாலய அகதி முகாமில் உள்ள ஐநூறுக்கும் அதிகமான அகதிகளும், வதிரி பரமானந்த ஆச்சிரமத்தில் உள்ள ஐநூறுக்கும் அதிகமான அகதிகளும் இந்திய நிவாரணப்பொருள்களைப் பெற்றுக்கொண்டனர். (இ–10)

## அகதி முகாம்களில் ரீஷேர்ட் இளைஞர்

யாழ்ப்பாணம், ஜூன் 30

வடமராட்சி அகதி முகாம்களில் 'ரீஷேர்ட்' அணிந்த இளைஞர்கள் காணப்படுகின்றனர்.

இந்த இளைஞர்கள் அண்மையில் வடமராட்சியில் "ஒப்பறேஷன் லிபறேசன்" இடம்பெற்றபோது கைது செய்யப்பட்டு பூஸா கொண்டு செல்லப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டவர்கள்.

இராணுவத்தினால் கைது செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டதற்கான அத்தாட்சிப்பத்திரம் இன்னும் கிடைக்காததால் இந்த ரீஷேர்ட்டை இவர்கள் ஓர் அத்தாட்சியாக உபயோகிக்கிறார்களாம். (இ–10)

## நோயாளிகளை பார்வையிட்டனர்

யாழ்ப்பாணம், ஜூன் 30

மந்திகை ஆஸ்பத்திரியில் உள்ள நோயாளர்களை இந்திய – இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தினர் நேற்றுப் பார்வையிட்டனர்.

கடந்த மாதம் வட

(4 ஆம் பக்கம் பார்க்க)

# இந்தியாவிடம் மாற்று நடவடிக்கை உண்டு; அதற்குமுன் ஸ்ரீலங்காவின் நிலை தெரியவேண்டும்

## பந்து கொழும்புப் பக்கத்தில் என்கிறார் ராஜீவ்

புதுடில்லி, ஜூன் 29

ஸ்ரீ லங்காவின் இனப்பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்கான சில மாற்று நடவடிக்கைகள் குறித்து நாம் தீர்மானித்து உள்ளோம்.

எனினும் பிரச்சினையை ஸ்ரீலங்கா எவ்வாறு தீர்க்க விரும்புகிறது என்பது குறித்து கொழும்பு அரசாங்கத்திடம் இருந்து தெளிவான பதிலை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். இப்போது பந்து ஸ்ரீலங்காவின் பக்கத்திலேயே உள்ளது.

இவ்வாறு இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி தெரிவித்தார்.

இனப்பிரச்சினை பற்றிய பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை ஸ்ரீலங்கா அரசுதான் மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் கூறினார்.

புதுடில்லியில் வெளிவிவகாரத்துறை செய்தியாளர் சங்கக் கூட்டத்தில் பிரதமர் ராஜீவ் காந்தி இன்று பேசினார்.

ஸ்ரீலங்காப் பிரச்சினை பற்றிய கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் பிரதமர் சொன்னதாவது;

விமானமூலம் குடாநாட்டில் உணவுப் பொதிகளைப் போட்ட நடவடிக்கையினால் உலக அரங்கில் இந்தியாவின் 'இமேஜ்' எவ்வகையிலும் பாதிக்கப்படவில்லை.

இதனைப் பல நாடுகள் வரவேற்றன. இந்த நடவடிக்கை வெற்றிகரமாக அமைந்தது.

நிவாரண உதவிகளை தொடர்ந்து யாழ் அனுப்புவது குறித்து இப்போதும் நாம் ஸ்ரீலங்காவுடன் தொடர்பு கொண்டுள்ளோம்.

நாம் விமான மூலம் உணவுப் பொருள்களைப் போட்டபின்னர் தான் யாழ் குடாநாடுமீதான பொருளாதார முற்றுகையை ஸ்ரீலங்கா அரசு விலக்கிக்கொண்டது.

இப்போது ஏனைய நாடுகளும் எம்மைப் பின்பற்றி அல்லலுறும் தமிழருக்கு நிவாரண உதவிகளை வழங்க முன்வந்துள்ளன. [அ–உ–எ]

## இராணுவம் சைக்கிளில் ரோந்து

யாழ்ப்பாணம், ஜூன் 30

வடமராட்சியில் உள்ள மின் முகாம்களை அண்டிய பகுதிகளில் இராணுவத்தினர் சைக்கிளில் ரோந்து செல்கின்றனர்.

சிவிலிலேயே இவர்கள் அதிகமாக இப்படி ரோந்து சுற்றி வருகின்றனர். (உ–10)

## சுபநேரம்

30–06–1987

செவ்வாய்க்கிழமை

சுபநேரம்:–
10.26 முதல் 11.56வரை

ராகுகாலம்:–
2.56 முதல் 4. 26 வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

சதுர்த்திவிரதம்

## 6 படையினர் பலி

யாழ்ப்பாணம், ஜூன் 30

கிழக்கு மாகாணத்தில் கஞ்சிகுடித்த ஆற்றுப் பகுதியை பொதுமக்களை பணயம் வைத்து முற்றுகையிட்ட படையினருக்கும் புலிகளுக்கும் இடையில் கடந்த இரு நாட்களாக மோதல் நடைபெற்றதாகவும்–

இந்த மோதலில் 6 படையினர் கொல்லப்பட்டதாகவும் புலிகள் அறிவித்திருக்கின்றனர்.

புலிகளின் தாக்குதலையடுத்து இராணுவப் படையினர் பொதுமக்

(4ஆம் பக்கம் பார்க்க)

ஆகஸ்டில் நடைபெற உள்ள

# ஜீ.சி.ஈ. (உயர்) பரீட்சை: பகிஷ்கரிக்க முடிவு

யாழ்ப்பாணம், ஜூன் 30

அடுத்த மாதம் நடைபெறவுள்ள ஜீ. சி. ஈ. உயர்தரப் பரீட்சையை பகிஷ்கரிப்பதென யாழ் மாவட்ட ஜீ. சி. ஈ. உயர்தர மாணவர்கள் தீர்மானித்துள்ளனர்.

நேற்று யாழ் பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நடைபெற்ற ஜீ.சி.ஈ. உயர்தரப் பரீட்சார்த்திகளுக்கான பொதுக் கூட்டத்தில் இது தொடர்பாக தீர்மானிக்கப்பட்டது.

ஆயிரக்கணக்கான பரீட்சார்த்திகள் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

பரீட்சைப் பகிஷ்கரிப்புத்தொடர்பாக பின்வரும் கோரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளன.

★ பாடசாலைகளில்

(4ஆம் பக்கம் பார்க்க)

முச்சந்தி முரளி



ஹலோ காந்தி, இன்னும் பந்தை மாறி மாறிப் போட்டு விளையாட நினைக்காதீர்கள். கெதியிலை முடிவு வேணும்...!

மூதூர் பிராந்தியத் தளபதி

# மேஜர் கஜேந்திரனும் 8 புலிகளும் வீரமரணம்

யாழ்ப்பாணம், ஜூன் 30

ஞாயிற்றுக்கிழமை அன்று மூதூரில் உள்ள தமது முகாம் ஒன்று படையினரால் முற்றுகையிடப்பட்டதை அடுத்து நடந்த நேரடி மோதலில் எமது மூதூர் பிராந்தியத் தளபதி மேஜர் கஜேந்திரன் உட்பட 9 விடுதலைப் புலிகள் வீரமரணமடைந்தனர்.

—இப்படி விடுதலைப் புலிகள் விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்த முகாம் துரோகி ஒருவரினால் காட்டிக் கொடுக்கப்பட்டது.

மேஜர் கஜேந்திரன், லெப்டினன்ட் குளியா (சிறி), நிமால், லொயிட், முத்தன், சுரேஷ், தாகூர், சுதன், கோபி ஆகியோர் வீரமரணமடைந்தனர்.

இந்தத் தியாகப் போராட்டத்தில் உயிரிழந்த வீரவேங்கைகளுக்கு எமது வீரவணக்கம்.

—இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (எ)

இளைய தலைமுறையின் இதயம் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★★★★★★★★★★
★ சின்னஞ்சிறு ★
★ விளம்பரம் ★
★★★★★★★★★★

**கண்டெடுக்கப்பட்டது**

வட்டுக்கோட்டை ஆத்தியடி பிள்ளையார் கோவிலுக்கு அருகில் உள்ள School of Talent தனியார் கல்வி நிறுவனத்தில் கற்கும் மாணவி ஒருவரால் புகைப்படம் சிறு தொகைப் பணம் அடங்கிய பேர்ஸ் ஒன்று கண்டு எடுக்கப்பட்டு ஆசிரியர் எஸ். புவனேந்திரனிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. தவறவிட்டவர் உரிய அத்தாட்சி காட்டி பெற்றுக்கொள்ளும்படி வேண்டிக்கொள்ளப்படுகின்றீர். School of Talent, நிர்வாகிகள்: S. திருக்குமார், S. புவனேந்திரன் (1252)


## ஸ்ரீலங்கா விமானம் ஓட்டிகள் சங்கமும் கண்டனம்

ஸ்ரீலங்கா விமானம் ஓட்டிகள் சங்கமும் விமானங்கள் மூலம் இந்தியா உணவுப் பொதிகளைப் போட்ட செயலை வன்மையாகக் கண்டித்து உள்ளது.

இந்திய யுத்த விமானங்கள் ஸ்ரீலங்கா ஆகாயப் பிராந்தியத்தினுள் அத்துமீறிப் புகுந்த செயலையும் இச்சங்கம் கண்டித்து உள்ளது. (இ-எ)

வளலாய் முகாம்-

# 19வீடுகள் ராணுவவசம்

பலாலி, ஜூன் 30

அண்மையில் வளலாயில் அமைக்கப்பட்ட மினி முகாமுக்காக பத்தொன்பது வீடுகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

சுமார் 50 பரப்புத் தோட்ட நிலங்களின் மண் அகழ்ந்து எடுக்கப்பட்டு முகாமின் அரணுக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

மேலும் 80 பரப்புக் காணிகளை முகாம் தனக்குள் சுவீகரித்துள்ளது.

வளலாயில் முகாமிடப்பட்ட வீடுகளின் விவரங்கள் வருமாறு:

திருவாளர்கள்: அருளம்பலம் தம்பிராசா வீடு பிரதான இராணுவ அலுவலகமாகப் பயன்படுகின்றது.

குட்டிப்பிள்ளை கனகநாயகத்தின் வீடு பிரதான ஆயுதக் களஞ்சியமாகப் பயன்படுத்தப்படுகிறது.

நாகர் செல்லத்துரையின் வீடு. இதில் வெடிமருந்துகளும் குண்டுகளும் சேமித்து வைக்கப்பட்டுள்ளன.

வைத்திலிங்கம் சிவலிங்கம் அவர்களின் வீடு.

இது இலவச உணவுப் பொருள் வழங்கும் களஞ்சிய அறையாகப் பயன்படுத்தப்படுகின்றது.

இவற்றைவிட இராணுவ உயர் அதிகாரிகள் சிப்பாய்கள் தங்குவதற்கும் மற்றும் தேவைகளுக்குமான ஏனைய பதினைந்துவீடுகள் வருமாறு: இராசர்திருமேனி, பண்டாரம் பழனிவேல், தர்மலிங்கம் தர்மபாலசிங்கம், பண்டாரம் துரை, சி. சரவணமுத்து, பண்டாரம் புவிராசா, கணபதிப்பிள்ளை குலசிங்கம், தம்பு துரை, தம்பு மாணிக்கம், பொன்னையா செல்லத்துரை, அம்பலவாணர் குடும்பம் (முன்பு இவ் வீட்டிலேயே பதுங்குகுழிக்குள் ஆறுபேர் இராணுவத்தால் சுட்டுக் கொலை செய்யப்பட்டனர்.) வெள்ளையன் மாணிக்கம், ஆள்வான் சின்னப்பொடி, எஸ். சிவரத்தினம், சின்னத்தம்பி சின்னத்துரை ஆகியோரது வீடுகள்.

முகாமைச் சுற்றிவரவுள்ள பகுதிகளில் முதலில் கம்பிச் சுருள் தடையும், பின்புகம்பி வேலித் தடையும், பின்பு மண் அரண் தடையும் காணப்படுகின்றன. (இ-119)

## ஷெல்லினால் காயம்

யாழ்ப்பாணம், ஜூன்30

யாழ் கோட்டை முகாமில் இருந்து நேற்றும் வழமை போல் தாக்குதல்களும் துப்பாக்கிப் பிரயோகங்களும் ஞாயிறன்றும்மேற்கொள்ளப்பட்டன.

இதன் காரணமாக சின்னக்கடைப் பகுதியில் இளைஞர் ஒருவர் காயமடைந்தார்.

ஷெல் குண்டுகள் கொட்டடி கடற்கரைப் பகுதிகளில் விழுந்து வெடித்தன. (உ-10)

# இலங்கை அகதிகளுக்கு தமிழகத்தில் தொழில்வாய்ப்பு

சென்னை, ஜூன் 30

இலங்கையில் இருந்து தமிழ்நாடு சென்ற தமிழ் அகதிகளுக்கு தமிழ் நாட்டில் தொழில்வாய்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது.

ஏற்கனவே சுமார் 300 பேருக்கு 6 மாத கால தொழிற் பயிற்சி வழங்கப்பட்டிருக்கிறது.

மென் பொறியியல் நுட்பம், தும்புத் தொழில், லோகவேலை, தட்டச்சு ஆகிய துறைகளில் இவர்கள் பயிற்சி பெற்றுள்ளனர்.

தேசிய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் இவர்களுக்கு ஒரு குறிப்பிட்ட விதம் வேலை வாய்ப்பு ஒதுக்கும்படி வேலை வாய்ப்புச் சம்பந்தப்பட்ட மாவட்ட அதிகாரிகள் கோரப்பட்டுள்ளனர்.

மண்டபம் முகாமில் தங்கி இருந்தோருக்கே தொழிற் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில் சுமார் 10 ஆயிரம் பேர்வரை தற்போது மண்டபம் முகாமில் தங்கி இருப்பதால் அந்த முகாம் அகதிகளால் நிரம்பி வழிகிறது. (-இ)

## மின்தாக்கி ஊழியர் மரணம்

யாழ்ப்பாணம், ஜூன்30

மின்சாரம் திருத்தும் வேலையில் ஈடுபட்டிருந்த மின் ஊழியர் ஒருவர் மின்சாரம் தாக்கி மரணமானார்.

ஞாயிறன்று இச் சம்பவம் நடந்தது.

கந்தர்மடத்தைச் சேர்ந்த சண்முகநாதன் சாந்தகுமார் (வயது 31) என்பவரே மரணமானவர் ஆவார். (உ-10)

## தற்கொலை

யாழ்ப்பாணம், ஜூன்30

குடும்பத் தகராறு காரணமாக குடும்பஸ்தர் ஒருவர் நஞ்சருந்தி தற்கொலை செய்து கொண்டார்.

குருநகரைச் சேர்ந்த 49 வயதான ஒருவரே இறந்தவர் ஆவார்.

கடந்த ஞாயிற்றுக் கிழமை யாழ், ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட இவர் சிகிச்சையின் பின் மரணமானார்.

இவரது மரணம் தொடர்பான விசாரணையையாழ்மரணவிசாரணை அதிகாரி திரு. க. கேசவன் நடத்தினர். (உ-10)

ஹெலி பிரசுரம் போடும்போது வாருங்கள்

# யாழ். வானொலி பற்றி எமக்குத் தெரியாது

### வீடுகளைப் பார்க்கச் சென்றோரிடம் இராணுவம் கூறிய பதில்

காங்கேசன்துறை, ஜூன் 30

''யாழ்ப்பாண வானொலி அறிவிப்பது பற்றி எமக்குத் தெரியாது. ஹெலி மூலம் பிரசுரம் போடுவோம் அப்போது வாருங்கள்.''

- இவ்வாறு வெள்ளைக் கொடி தாங்கி தமது வீடுகளைப் பார்க்கச் சென்ற வீமன்காமம் பகுதி மக்களிடம் அங்கு கடமையிலிருந்த இராணுவத்தினர் தெரிவித்தனர்.

ஞாயிறன்று இப் பகுதியைச் சேர்ந்த சுமார் நூறு பேர் வெள்ளைக் கொடிதாங்கி வீமன்காமம் டச்சு வீதியால் வீமன் காமம் நோக்கிச் சென்றனர்.

வீமன்காமம் கொலனியில் வைத்து இராணுவத்தினர் இவர்களை வழிமறித்தனர். பொது மக்கள் கைகளை உயர்த்தியவாறு வெள்ளைக் கொடிகளுடன் இராணுவத்தை அணுகினர்.

தமது கஷ்ட நிலையை இராணுவத்திற்குத் தெரியபடுத்திய அவர்கள், யாழ்ப்பாண வானொலி வதிவிடங்களுக்கு திரும்புமாறு விடுத்த வேண்டுகோளையும் தெரியப்படுத்தினர்.

அப்போதே மேற்கண்டவாறு பதில் கூறப்பட்டது. (உ-68)

## மக்கள் முகம்

### வேலணை நேதாஜி சனசமூக நிலையம்

வேலணை, ஜூன் 30

வேலணை நேதாஜி சனசமூக நிலையத்தின் புதிய நிர்வாகிகள் வருமாறு:-

தலைவர்: திரு. வே. பி. சண்முகநாதன், உப தலைவர்: திரு. க. காங்கேசு, செயலாளர்: திரு. நா. சுந்தரபவான், உப செயலாளர்: திரு. இ. கந்தசாமி, பொருளாளர்: திரு. வே. திருக்கேதீஸ்வரன்.

ஐந்து பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது. (இ-161)

### பளையில் கலைமணி விழா

யாழ்ப்பாணம், ஜூன் 30

பளை மகாவித்தியாலய உயர்தரமாணவர் ஒன்றியத்தின் '' கலைமணி '' வெளியீட்டு விழா நாளை புதன்கிழமை பிரஸ்தாப கல்லூரி மண்டபத்தில் இடம்பெறும்.

பிற்பகல் 12-30 மணிக்கு வைபவம் ஆரம்பமாகும்.

பிரதம விருந்தினராக கலாநிதி சபா. ஜெயராசாவும் சிறப்பு விருந்தினராக திரு. கே. கே. சோமசுந்தரமும் கலந்து கொள்கிறார்கள்.

செல்வன் மு. கருணாகரன் வைபவத்திற்கு தலைமைவகிப்பார். (இ)

## கட்டுத்துவக்கில் சிக்கியவர்

கிளிநொச்சி, ஜூன் 30

மாடு துரத்தச் சென்றவர் மறைவாக வைக்கப்பட்டிருந்த கட்டுத்துவக்கிற்கு இலக்காகி காயமடைந்த சம்பவம் உடையார் கட்டு எனும் இடத்தில் நடைபெற்றது. (உ-76)

## கண்ணிவெடி 3 படையினர் பலியாகினர்

யாழ்ப்பாணம், ஜூன்30

மன்னார் உயிலங்குளத்தில் கடந்த சனிக்கிழமை காலை இடம்பெற்ற கண்ணிவெடித் தாக்குதல் ஒன்றில் இராணுவப் படையைச் சேர்ந்தமூவர் உயிரிழந்தனர். நான்கு பேர் படுகாயமடைந்தனர்.

படையினர் பயணம் செய்த வாகனம் பலத்த சேதமுற்றது.

2ஆவது லெப்டினன்ட் ஸி. ஜே. திலகரத்னவும், சிப்பாய்களான சே. மசிறி, சந்திரரத்ன ஆகியோரே உயிரிழந்தவர்களாவர்.

காயமடைந்தோர் அனுராதபுரம் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டனர். (உ)

தேர்தல் அதிகாரிகள்

# வடக்கு - கிழக்கு வருவதற்குத் தயக்கம்

கொழும்பு, ஜூன் 30

நாடாளுமன்ற இடைத் தேர்தல்கள், உள்ளூராட்சித் தேர்தல்கள் ஆகியவற்றை நடத்த தென்னிலங்கையில் இருந்து வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு செல்ல அரசு அதிகாரிகள் தயக்கம் காட்டுகிறார்கள். என்று அறிவிக்கப்படுகிறது.

கொழும்பில் இருந்து பலர் தேர்தல் அதிகாரிகளாக இங்கு அனுப்பப்பட உள்ளனர்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அதிகாரிகள் பற்றாக் குறையாக இருப்பதே இதற்குக் காரணம். (இ-எ)

திட்டமிட்டபடி

# மாவை உற்சவத்தை நடத்த உதவி செய்க

### இந்திய அதிகாரியிடம் முறையீடு

காங்கேசன்துறை, ஜூன் 30

வரலாற்றுப் பெருமை மிக்க மாவிட்டபுரம்கந்தசாமிகோவில் வருடாந்த மகோற்சவத்தை திட்டமிட்டபடி எதிர் வரும் முதலாம் திகதி நடத்துவதற்கு ஒழுங்குகள் செய்து தருமாறு ஆலயத்தின்ஆதீனகர்த்தா சு.து. சண்முகநாதக்குருக்களும் பழைய வீமன்காமம் பிரசைகள் குழுப் பிரதிநிதிகளும் யாழ் அரசாங்க அதிபர், இந்தியப் பிரதிநிதி கப்டன் குப்தா ஆகியோரை சந்தித்து வற்புறுத்தியுள்ளனர்.

மாவை ஆலய சுற்றுடலில் அமைதியான சூழ்நிலை மீண்டும் திரும்ப ஆவன செய்யுமாறும்—

சைவ மக்களின் மிக முக்கிய விரத தினமான ஆடி அமாவாசை விரதத்தை அனுஷ்டிக்க வசதி செய்து தருமாறும் இச் சந்திப்பில் வலியுறுத்தப்பட்டுள்ளது (உ-68)

# இடம் பெயர்ந்தோர் நிவாரணம் பெற யாழ். வரவேண்டும்

யாழ்ப்பாணம், ஜூன்30

பன்செயல்களால் யாழ் மாவட்டத்திலிருந்து வெளிமாவட்டங்களுக்கு அகதிகளாக இடம் பெயர்ந்தவர்கள் தமது இந்திய நிவாரணப் பொருள்களைப் பெறுவதற்கு யாழ் மாவட்டத்துக்கே வர வேண்டும்.

யாழ். செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதி ஒருவர் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்திலிருந்து அகதிகளாக வெளி மாவட்டங்களுக்குச் சென்றவர்களும்—

வெளி மாவட்டங்களில் இருந்து அகதிகளாக யாழ் மாவட்டத்துக்கு வந்து பின்னர் தமது சொந்த மாவட்டங்களுக்குச் சென்றவர்களும்—

வேறு மாவட்டங்களுக்கு பாதுகாப்புக்காக இடம் பெயர்ந்தவர்களும்—

யாழ். மாவட்டத்தில் தாம் இருந்த பழைய இடத்திற்கு வந்தே நிவாரணப் பொருள்களைப் பெற்றுக் கொள்ளலாம் என்றும் அவர் தெரிவித்தார். (இ-எ)

## ஐ. தே. க. காரியக்கமிட்டி கூடுகிறது

கொழும்பு, ஜூன் 30

ஐ. தே. க. காரியக் கமிட்டி இன்றுசெவ்வாய் கூடும்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நடைபெறவுள்ள நாடாளுமன்ற இடைத் தேர்தல்களில் போட்டியிடும் வேட்பாளர்கள் பற்றி இக்கூட்டத்தில் ஆராயப்படும்-

- இப்படி கட்சித் தலைவர் ஹர்ஷா அபயவர்தன தெரிவித்தார். (உ-எ)

# இன்றைய அரசுக்கு கொள்கையுமில்லை நண்பர்களும் இல்லை

--- தினேஷ்

கொழும்பு, ஜூன் 30

இன்றைய அரசுக்கு கொள்கையும் இல்லை; உலகில் நண்பர்களும் இல்லை.

மஹரகம எம்.பி. திரு. தினேஷ் குணவர்த்தன முன் கண்டவாறு நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

அவர் மேலும் சொன்னதாவது;

அரசின் கொள்கைகள் தான் இன்று எமது எதிரிகளில் ஒருவராக இந்தியாவை மாற்றிவிட்டது.

அரசின் கொள்கையால் இந்து சமுத்திரப் பிராந்தியமே பயமுறுத்தல் பிராந்தியமாக மாறிவிட்டது.

இன்று கூறுவதை நாளை மாற்றிப் பேசுகின்ற இந்த அரசினால், பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டுவிட முடியாது.

ஸ்ரீலங்காவில் இன்று பிறப்பவர்களின் எண்ணிக்கையிலும் பார்க்க இறப்பவர்களின் எண்ணிக்கை தான் அதிகரித்துள்ளது.

இறப்பவர்களுக்கு இப்போது மரண விசாரணை கூட நடத்தப்படுவது இல்லை.

அடக்குமுறைக்கு முடிவே இல்லை.

இப்படி திரு.குணவர்த்தன சொன்னார்.

சம்யூனிஸ்ட் எம். பி, டியூ குணசேகரா பேசுகையில் சொன்னதாவது;

இந்தியாவுக்கு எதிராகக் கருத்துக்களை வெளியிடும் விஷயத்தில் ஸ்ரீலங்கா அரசு அவதானமாக நடந்துகொள்ள வேண்டும்.

அரசாங்கம் கூறுவது நாட்டின் 1½ கோடி மக்களையும் தான் பாதிக்கும்.

எமது வெளிநாட்டுக் கொள்கை நண்பர்களிலும் பார்க்க எதிரிகளைத் தான் தேடித் தந்துள்ளது.

இந்தியாவை எதிர்ப்பதால் நாம் நன்மை அடையப்போவது இல்லை.

1983 இல் நாடு எதிர்நோக்கிய நிலை இன்று இல்லை. இன்று நாடே யுத்தத்தில் ஈடுபட்டுள்ளது.

— இப்படி திரு. குணசேகரா சொன்னார். (இ-எ)

# ஆக்கிரமிப்பாளனை கௌரவ விருந்தாளியாக ஸ்ரீலங்கா கருதாது

- பிரதமர்

கொழும்பு, ஜூன் 30

ஆக்கிரமிப்பாளனை கௌரவ விருந்தாளியாக ஸ்ரீலங்கா கருதாது. பிரதமர் பிரேமதாச நாடாளுமன்றத்தில் பேசுகையில் முன் கண்டவாறு தெரிவித்தார்.

அவசரகால நீடிப்புப் பிரேரணை பற்றிய விவாத முடிவில் பேசுகையில் பிரதமர் இப்படித் தெரிவித்தார்.

பிரதமர் மேலும் சொன்னதாவது;

பதவிக்கு வந்தவுடன் பிரதமர் காந்தியை உத்தியோகபூர்வமாக அழைக்கப் போவதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அறிவித்திருக்கின்றது.

எதற்காக எமது உள்நாட்டுப் பிரச்சினையைத் தீர்க்க இந்தியப் பிரதமரை இங்கு அழைக்க வேண்டும் என்பது எனக்கு விளங்கவில்லை.

அவரை விருந்தாளியாக வரவேற்க நாம் தயார்; ஆனால் எமது பிரச்சினையைத் தீர்ப்பதற்காக அவரை அழைக்கத் தயார் இல்லை.

1815இல் நடந்த காட்டிக்கொடுத்த சம்பவத்தைத்தான் சுதந்திரக் கட்சியின் பேச்சு நினைவுக்குக் கொண்டு வருகின்றது.

விமானம் மூலம் உணவுப் பொதிகளை போட்ட செயலை அன்று கண்டித்த சுதந்திரக் கட்சி, இன்று ஏதோ எல்லாம் பேசுகின்றது.

ஸ்ரீ லங்காவின் சார்பில் சுதந்திரக் கட்சி பேசுகின்றதா? அல்லது வேறு நாடு ஒன்றுக்காகப் பேசுகின்றதா?

அரசின் சம்மதமில்லாமல் உணவு அனுப்புவதைத்தான் ஸ்ரீலங்கா அரசு எதிர்த்தது; சம்மதத்துடன் அனுப்புவதை எதிர்க்கவில்லை.

இப்படி பிரதமர் தெரிவித்தார். (இ-எ)

# வடக்குக் கிழக்கில் இடைத்தேர்தல் ஏன்?

### விளக்குகின்றார் ஜனாதிபதி

கொழும்பு, ஜூன் 30

அரசுடன் இனப்பிரச்சினைப் பேச்சுக்களை நடத்துவதற்குரிய தங்கள் பிரதிநிதிகளைத் தெரிவு செய்ய தமிழருக்கு நாடாளுமன்ற இடைத் தேர்தல்கள் மூலம் சந்தர்ப்பம் அளிக்கப்படுகின்றது,

இப்படி ஜனாதிபதி ஜெயவர்த்தன தெரிவித்திருக்கின்றார்.

தமிழ்ப் பகுதிகளில் ஏன் நாடாளுமன்ற இடைத் தேர்தல்களை நடத்தஅரசு தீர்மானித்தது?

இந்தக் கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே ஜனாதிபதி முன்கண்டவாறு தெரிவித்தார். (உ-எ)

# வாக்காளர் இடாப்பு தயாரிக்க ஏற்பாடு

காங்கேசன்துறை, ஜூன் 30

யாழ் மாவட்டத்தில் சில இடங்களில் வாக்காளர் இடாப்புக்களை தயாரிக்கும் வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வடக்கு,கிழக்கு மாகாணங்களில் உபதேர்தல்களை நடத்துவது என அரசாங்கம் அறிவிப்பு விடுத்திருக்கும் வேளையில் வாக்காளர் இடாப்புகளை தயாரிக்கும் ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

யாழ் மாவட்டத்தின் சில பகுதிகளில் வாக்காளர் இடாப்புகளை தயாரிப்பதற்காக விண்ணப்பப்படிவங்களும் பொது மக்களுக்கு விநியோகிக்கப்பட்டிருக்கின்றன. (உ-68)

6 ஆவது திருத்தத்தை நீக்கினால் கூட

# இடைத் தேர்தல்களில் கூட்டணி போட்டியிடாது

### அமிர்தலிங்கம் கூறுகிறார்

கொழும்பு, ஜூன் 30

அரசமைப்புச் சட்டத்தின் ஆறுவது திருத்தத்தை நீக்கினால் கூட தமிழர் விடுதலைக் கூட்டணி இடைத்தேர்தல்களில் போட்டியிடாது.

கூட்டணிச் செயலதிபர் திரு.அ. அமிர்தலிங்கம் முன்கண்டவாறு தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் தமிழர் பிரதிநிதித்துவம் இரண்டாம்பட்சமானது. இன்று தமிழனுக்கு அது முக்கியமானதல்ல.

தமிழனின் தேசியப் பிரச்சினைக்கு முதலில் தீர்வு காணப்பட வேண்டும்.

—இப்படி திரு. அமிர்தலிங்கம் தெரிவித்தார்.

தமிழ்ப் பகுதிகளில் இடம் பெறும் இடைத் தேர்தல்கள் பற்றி எமது கட்சி இன்னும் சிந்திக்கவில்லை— இப்படி லங்கா சமசமாஜக் கட்சித் தலைவர் டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா தெரிவித்தார். (உ-எ)

## பனாமா அரசு திருப்பி அழைத்தது

பனாமா, ஜூன் 29

பனாமா அரசு, அமெரிக்காவில் உள்ள தூதரைத் திருப்பி அழைத்தது. (இ-எ)


HORIZON ENTERPRISES

# பிரயாண ஒழுங்குகள்

★ டுபாய் ★ குவைத் ★ சவூதி அரம்கோ கொம்பனி

டிரைவர் விமானநிலையக்கிளீனர் ஹொஸ்பிடல்கிளீனர்
சமையற்காரர் H. V. டிரைவர் தச்சுவேலை
பணிப்பெண்கள் மேசன்

சிங்கப்பூர் பணிப் பெண்கள்

குறைந்த கட்டணத்தில் வயதெல்லை 17 - 35

மற்றும் அனைத்து மத்தியகிழக்கு நாடுகளுக்கான வெற்றிடங்கள் மிக அதிகளவில் எம்மிடம் இருப்பதால் தாமதமின்றி தொடர்பு கொள்ளவும். தற்போதைய நாட்டு நிலைமை காரணமாக எம்முடன் தொடர்பு கொண்டு நாம் முதல் தடவையில் அவர்களை கொழும்பு அழைத்துச் சென்று மீண்டும் யாழ் திரும்பாது எமது பாதுகாப்புடன் சகல வசதிகளும் நிறைந்த எங்கள் சொந்த வதிவிடத்தில் வைத்து மிகத் துரிதகதியில் பயணம் மேற்கொள்ள ஏற்பாடுகள் செய்து தரப்படும் என்பதையும் உண்மையுடன் தெரிவித்துக் கொள்கிறோம் எந்தக் காரணம் கொண்டும் முற்பணம் எதுவும் அறவிடப்படமாட்டாது. எமது முகவர் நிலையத்தினால் பயணம் மேற்கொள்வோர் பெயர் விபரம் அடுத்த வாரம் வெளியிடப் படும். மற்றும் எம்மிடம் எல்லா நாட்டிற்கான சகலவிதமான முத்திரைகளும் மலிவு விலையில் கிடைக்கும். உங்கள் கடவுச்சீட்டுக்கள் [ PASS PORT ] குறித்த தவணையில் குறைந்த செலவில் செய்து தரப்படும்.

★ மாலைதீவு செல்ல விரும்புவோர் உடன் தொடர்பு கொள்ளவும்; வயதெல்லை 17 — 35. மிகக்குறைந்த கட்டணத்தில் துரிதகதியில் செய்து தரப்படும்.

A. பத்மதாஸ்
இல, 97/1, பருத்தித்துறை வீதி,
கல்வியங்காடு,
யாழ்ப்பாணம்.

HORIZON ENTERPRISES
No. 87, 2/1, 2nd Floor,
Kollupitiya Lane,
COLOMBO - 3.
Telephone: 574000


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## உதய சங்கற்பம்

ஒவ்வொருவரும் உலகத்தைத் திருத்துவதற்கு முற்படுகிறுர். ஆனுல் எவரும் தன்னைத்தானே திருத்திக் கொள்ள முற்படுவதைக் காணேம்.

— டால்ஸ்டாய்.

உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

இல:- 292/2 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி 24805 22073

30 6 1987 த.பெ.இல: – 23

## தேர்தலும் ஒரு கேடா?

நாடு முழுவதிலும் மாநகரசபைகள், நகரசபைகள், கிராமோதய சபைகளுக்குத் தேர்தல் நடக்கும் என்று அரசாங்கம் அறிவித்திருந்தது. போகட்டும். வடக்கு, கிழக்குப் பகுதிகளிலும் அந்தத் தேர்தல் நடக்கும் எனத் தெரிவிக்கப்பட்டதுதான் வியப்பைத் தருகின்றது!

வடக்கு, கிழக்கில் உள்ள தமிழர் பிரதேசங்களில் உள்ளூராட்சித் தேர்தல் நடக்கும் என்பதற்கான சூழ்நிலை கடுகளவேனும் இல்லை. இதனை அரசாங்கம் நன்கு தெரிந்து கொண்டும், இப்பகுதிகளில் நாடாளுமன்ற உறுப்பினர் பதவிகளுக்கான தேர்தலையும்நடத்தப் போவதாக அறிவித்திருக்கிறது. இது பெரும் வேடிக்கையானதும், கோமாளித்தனம் மிகுந்ததும் ஆகும்.

வடக்கிலும் கிழக்கிலும் இராணுவ ஆட்சி என்று முற்றுமுழுதாகப் பிரகடனப்படுத்தப் படவில்லை. ஆயினும், இப் பகுதிகளில் நடப்பது இராணுவ ஆட்சியேயாகும். இப்பகுதிகளின் மூலைமுடுக்கெல்லாம் ஆயுதப்படை முகாம்களை அமைத்து, இவற்றை ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசங்களாக மாற்றியுள்ளது ஸ்ரீலங்கா அரசு.

ஈழத் தமிழ் மண்ணில் சாதாரண இராணுவ ஆட்சி மட்டுமா நடக்கிறது? இராணுவ பலத்துடன் தமிழ் இனத்தை ஒழித்துக் கட்டி, தமிழ் மண்ணை நிர்மூலமாக்கி, தமிழர்களின் சமய, கலாசார, பண்பாட்டு மூலங்களை வேரறுத்து, ஊழிப் பேரழிவு நடத்தும் அரக்க ஆட்சியல்லவா நடந்துகொண்டிருக்கிறது!

வடக்கில் ஷெல் தாக்குதல் என்றும், ஹெலித் தாக்குதல் என்றும், பொம்மர் தாக்குதல் என்றும் நடத்தி மக்கள் அழிக்கப்படுகிறுர்கள். அவர்களது குடியிருப்புகள் மற்றும் தொழில் நிலையங்கள் துவம்சம் செய்யப்படுகின்றன. மக்கள் உண்ண உணவின்றி, அவற்றை வாங்குவதற்கு ஏற்ற உழைப்பின்றி, இருக்க இடமின்றி, உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு அங்கும் இங்கும் ஓடுகிறுர்கள். சொந்தப் பிரதேசமும், சொந்த வீடும் பாதுகாப்பு இல்லாத இடங்களாக மாற்றப்பட்டு விட்டன.

கிழக்கிலோ நிலைமை மேலும் மோசம். தமிழ்க் கிராமங்கள் நிர்மூலமாக்கப்பட்டு விட்டன. எஞ்சிய சில வீடுகளிலும் மக்கள் வாழ முடியாத நிலை. தேடுதல், முற்றுகை என்று மணிக்கு மணி அங்கு அக்கிரம ஆட்சி. மக்கள் காடுகளில் வாழும் கண்ருவி. உணவின்றி வாடும் பரிதாபம்.

இவ்வாருகத் தமிழன் தனது உறவிழந்து, மண் இழந்து, உடைமை இழந்து தானும் ஜீவமரணப் போராட்டம் நடத்தி வருகிறுன். இவ்வேளையில் அவனுக்கு ஏது தேர்தலும், வாக்கும்? வாழ வழியின்றி திக்கற்று நிற்கும் அவனை வெறும் வாக்குச் சீட்டுக் காகிதம் வாழ வைக்குமா? இவ்வேளையில் தமிழனுக்கு தேர்தலும் ஒரு கேடா?

அவன் வாக்குச் சீட்டைப் போடுவதனுல் அவனது அவலங்களைப் போக்கக் கூடியதான அரசியல் உரிமைகளும், மனித உரிமைகளும் கொண்டு வந்து கொட்டப்படுமா?

ஈழத் தமிழர்களை மரண வாசலுக்குக் கொண்டு போய் விட்டிருக்கும் ஸ்ரீலங்கா அரசு, உலகுக்கு நல்ல பிள்ளையாகக் காட்டுவதற்காக தேர்தல்களைப் பற்றிப் பிதற்றுகிறது.

இராணுவம் நிலை கொண்டுள்ள வடமராட்சியில் துப்பாக்கி முனையில் மக்களை வாக்களிக்கச் செய்து தமிழ்ப் பகுதிகளில் ஜனநாயகத்தை நிலைநாட்டியதாக போலிச் சித்திரம் வரைய அரசு முனைகிறது.

தங்களைத் தாமே ஆளும் சுயாட்சி உரிமை கிடைக்கும் வரைக்கும் வாக்குச் சீட்டு இனித் தமிழர்களுக்குத் தேவை இல்லை. அதன் மீது கீறுவதால் ''ஒரு வெள்ளிச் சல்லிக்குத்'' தானும் பயன் கிடைக்கப் போவதில்லை!

நாற்பது வருடகால அரசியல் அனுபவங்களும், கடந்த நான்கு வருடகால வாழ்க்கை— இல்லை, இல்லை— மரண அனுபவங்களும் தமிழர்களுக்கு இதைச் சுயமாகவே உணர்த்தும். மற்றவர் சொல்லித்தான் அறிந்து கொள்ள வேண்டும் என்ற நிலையில் அவர்கள் இல்லை.

வடக்கு, கிழக்கு தேர்தல் என்பது பனையால் விழுந்தவனை மாடு ஏறி மிதிப்பதற்கு நிகரானதாகும். இங்கு மேலும் இராணுவ அட்டூழியங்களைக் கட்டவிழ்த்து விடுவதற்கு மற்றொரு புலமாகவும் அது உருவெடுக்கும்.

ஆகையால் இத்தேர்தலில் போட்டியிட எவரும் முன் வந்தால் அவர்கள் தமிழ்த் தேசத்துரோகிகளாகக் கருதப்பட்டு, அதற்கேற்ற விதத்தில் நடத்தப்பட வேண்டும்.

மொத்தத்தில் வடக்கு, கிழக்கில் உள்ளூராட்சி, நாடாளுமன்றத் தேர்தல்கள் என்பது அரசின் மிகப்பெரும் சதி. அதனை ஒவ்வொரு தமிழனும் உணர்ந்து முற்ருகப் பகிஷ்கரிக்க வேண்டும்.

★ மக்கள் எழுச்சிக்கு

# தென்கொரிய அரசு பணிந்தது

## ஜனுதிபதியை மக்களே நேரடியாகத் தெரிவு செய்வர்

சோல், ஜூன் 29

மக்கள் எழுச்சிக்கு தென் கொரிய அரசு பணிந்தது.

ஜனுதிபதியை மக்கள் நேரடியாகத் தெரிவு செய்ய அனுமதிப்பது என்று தென்கொரிய அரசுநேற்று உத்தியோக பூர்வமாக அறிவித்தது.

எதிர்க் கட்சிகளும் பொது அமைப்புக்களும் ஜனுதிபதி மக்களால் நேரடியாகத் தெரிவு செய்யப்பட வேண்டும் என்றும்— தேர்தல் சுதந்திரமானதாக இருக்கவேண்டும் என்றும் கோரி கடந்த மூன்று வாரங்களாக தென்கொரிய நகரங்களில் ஆர்ப்பாட்டங்கள் நடத்தி வந்தன.

அமெரிக்க அரசாங்கமும் ஜனநாயக சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப் படவேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தும் முகமாக விசேட தூதர் ஒருவரை சோல் நகருக்கு அனுப்பிவைத்தது.

ஒரு ஆள்; ஒரு வாக்கு அடிப்படையில் ஜனுதிபதித் தேர்தலை நடத்தவும் மற்றும்பல ஜனநாயக சீர்திருத்த நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் தயாராக இருப்பதாக தென் கொரிய அரசு தற்போது அறிவித்து உள்ளது.

(இ-எ)

வெளி உலகில்

## ஆப்கானிஸ்தானில் அரசியல் கட்சிகளை அமைக்கும் சட்டமூலம்

காபூல், ஜூன் 26

ஆப்கானிஸ்தானில் புதிதாக அரசியல் கட்சிகளை ஆரம்பிக்க அனுமதிக்கும் சட்டமூலம் அடுத்தமாதம் கொண்டு வரப்படவுள்ளது.

இப்படி காபூல் அரசுத் தலைவர் நஜிபுல்லா அறிவித்தார்.

புதியகட்சிகள் இரண்டு பிரதான நோக்கங்களை ஏற்றுக்கொண்டவையாக இருக்கவேண்டும்.

ஒன்று, நாட்டில்அமைதியை உருவாக்குவது.

மற்றது, சோவியத் யூனியனுடனுன ஒருமைப்பாட்டை உறுதிப்படுத்துவது.

இந்த இரண்டு நோக்கங்களையும் ஏற்றுக் கொண்ட அரசியல் கட்சிகள் மட்டுமே தேசிய முன்னணியில் சேர்த்துக் கொள்ளப்படும்.

இப்படி திரு. நஜிபுல்லா அறிவித்தார்.

இதனிடையில் ''ஆப்கானிஸ்தான் ஜனநாயக குடியரசு'' என்ற பெயருக்குப் பதிலாக 'ஆப்கானிஸ்தான் குடியரசு' என்று பெயர் மாற்றம் செய்யவேண்டும் என்ற யோசனையையும் திரு. நஜிபுல்லா வெளியிட்டார். (இ-எ)

## பிஜியில் உருவாகும் அரசமைப்புச் சிக்கல்

சுவா, ஜூன் 29

பிஜியில் அரசமைப்புச் சீர்திருத்த நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்ல முடியாதவாறு முட்டுக்கட்டை ஏற்பட்டு உள்ளது.

கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தின் உறுப்பினர்கள் பதவி கவிழ்க்கப்பட்ட பிரதமர் டாக்டர் பவித்ராவின் தலைமையில் கூடி, ''ஒவ்வொரு பிரஜையினதும் உரிமைகள் பேணப்பட வேண்டும்''— என்று தீர்மானம் நிறைவேற்றி உள்ளனர்.

இத்தீர்மானம் இராணுவப் புரட்சியில் ஈடுபட்ட கேர்ணல் ரபுக்காவின் அரசமைப்புச் சட்ட சீர்திருத்தத்துக்கு முட்டுக்கட்டையாக அமைந்துள்ளது. என்று அரசியல் அவதானிகள் கூறுகின்றனர்.

டாக்டர் பவித்திரா தலைமையிலான ஒரு தூதுக்குழு, கவர்னர் ஜெனரலைச் சந்தித்து அவரிடம் தீர்மானத்தைச் சமர்ப்பித்து பேச்சுக்கள் நடத்தத் தீர்மானித்துள்ளன.

(இ-எ)

### நிக்கரகுவா அரசு உதவி

மனுகுவா, ஜூன் 29

இன ஒதுக்கலை எதிர்த்துப் போராட அமைக்கப்பட்ட ஆபிரிக்க நிதியத்துக்கு நிக்கரகுவா அரசு ஐம்பதினுயிரம் டாலர் நிதி கொடுத்துள்ளது.

இத்தகவலை நிக்கரகுவா ஜனுதிபதி ஒட்டேகா செய்தியாளரிடம் தெரிவித்தார். (இ-எ)

### கூர்க்காலந்து விடுதலைக் கூட்டணி டில்லி வரும்

புதுடில்லி, ஜூன் 29

மத்திய அரசுடன் பேச்சுக்கள் நடத்த கூர்க்காலந்து தேசிய விடுதலைக் கூட்டணித் தூதுக்குழு ஒன்று அடுத்த மாதம் புதுடில்லி வர உள்ளது.

## மசகு எண்ணெய் உற்பத்தி அதிகரிக்கும்

வியன்னு, ஜூன் 29

உலகில் எண்ணெய்ச் சந்தையை ஸ்திர நிலையில் வைத்திருப்பதற்காக எண்ணெய் உற்பத்தியை சிறிதளவு அதிகரிக்க ஒபெக் அமைப்பு தீர்மானித்துள்ளது.

எண்ணெய் உற்பத்தியில் ஈடுபடும் 13 நாடுகள் கொண்ட இந்த அமைப்பின் கூட்டம் வியன்னுவில் மூன்று தினங்களாக நடைபெற்றது.

அதன் பின்னர் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

தற்போது ஒரு கோடி 60 லட்சம் பீப்பாய் மசகு எண்ணெய் தினமும் உற்பத்தியாகின்றது.

இதனை 60 லட்சத்தினுல் அதிகரிக்க அமைப்பு முடிவு செய்துள்ளது.

1987 இறுதி வரை உற்பத்தி இந்த அளவில் இருக்கும்.

அதே நேரத்தில் ஒரு பீப்பாய் எண்ணெய்யின் விலையை 18 டாலராக இந்த ஆண்டு இறுதி வரை நிர்ணயிக்கவும் அமைப்பு தீர்மானித்தது. (இ-எ)

### நிலவாயு டீசல்

புதுடில்லி, ஜூன் 29

நிலவாயுவில் இருந்து மண்எண்ணெய், டீசல் ஆகிய எரிபொருள்களை வடித்தெடுக்கும் தொழில் நுட்ப முறை ஒன்றை இந்திய விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

புனுவில் உள்ள தேசிய ரசாயன ஆராய்ச்சி நிறுவனத்தில் இது கண்டுபிடிக்கப்பட்டது.

இந்த நுட்பத்தை உலகில் கண்டுபிடித்த இரண்டாவது நாடு என்ற பெருமை இந்தியாவுக்கு கிடைத்துள்ளது.

நியூஸிலாந்து முதலாவது நாடு ஆகும்.

நிலவாயு முதலில் மெதனோல் ஆக மாற்றப்படும். பின்னர் ஒல்போன்ஸின் ஆக மாற்றப்பட்டு பின்னர் மண் எண்ணெய், டீசல் ஆக வடித்தெடுக்கும்.

### ஈரான் கண்டனம்

தெஹ்ரான், ஜூன் 29

வளைகுடாவுக்கு யுத்தக் கப்பல்களை அனுப்பியதற்காக அமெரிக்காவை ஈரான் வன்மையாகக் கண்டித்துள்ளது.

பிரகடனப்படுத்தாத யுத்தம் ஒன்றை அமெரிக்கா நடத்தமுயற்சிப்பதாக ஈரான் குற்றம் சாட்டியுள்ளது.

யுத்தக்கப்பல்களை அனுப்பியுள்ளதன் மூலம் வளைகுடாவில் வல்லரசுகளின் மோதலுக்கு அமெரிக்கா வழி வகுத்துள்ளதாகவும் ஈரான் மேலும் குறை கூறியுள்ளது. (இ-எ)

# பூஸா முகாமில் சித்திரவதை நிறுத்தப்பட வேண்டும்

## மன்னிப்புச்சபை அறிக்கை

ஸ்ரீலங்கா— பூஸா இராணுவ முகாமில் சித்திரவதை, துன்புறுத்தல்கள், சுகாதாரச் சீர்கேடு பற்றிய முறைப்பாடுகள். இத்தலைப்பில் சர்வதேச மன்னிப்புச்சபை வெளியிட்ட ஆறுபக்க அறிக்கையின் முதலாவது பகுதி இங்கு பிரசுரமாகின்றது.

ஸ்ரீலங்காவின்தென் பகுதியில் உள்ளது பூஸா இராணுவ முகாம்.

2 ஆயிரத்து 500க்கு மேற்பட்ட தமிழர்கள் விசாரணையின்றி இம் முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

வைத்திய வசதிகள் இன்றியும் சித்திரவதை காரணமாகவும் தடுத்து வைக்கப்பட்டிருந்த சிலர் உயிரிழந்தனர் என்று அறிக்கைகள் கிடைத்து உள்ளன.

இன்னும் பலர் வயிற்றோட்டம், வாந்திபேதி, சொறி சிரங்கு முதலிய நோய்களினுல் பீடிக்கப்பட்டுள்ளனர்.

### கவலை தரும் நிலைமை

இதுபோன்ற முறைப்பாடுகளினுல் சர்வதேச மன்னிப்புச்சபை பூஸா இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழர் நிலை குறித்து கவலை அடைகின்றது.

சித்திரவதையை நிறுத்த போதிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களுக்கு சுத்தமான தண்ணீர், போதுமான உணவு, போதுமான வைத்திய வசதிகள் வழங்கப்பட வேண்டும்.

குற்றம் புரிந்தவர்களைப் பராமரிக்க ஐ.நா. விதித்துள்ள ஆகக் குறைந்த வசதிகள் இவர்களுக்கு வழங்கப்பட வேண்டும்.

ஸ்ரீலங்கா அதிகாரிகள் இதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று சர்வதேச மன்னிப்புச்சபை கோருகின்றது.

### பின்னணித் தகவல்கள்

தனித் தமிழ் நாடு ஒன்றை அமைக்கும் ஆயுதப் போராட்டத்தில் தமிழ்த் தீவிரவாத அமைப்புக்கள் ஈடுபட்டுள்ளன.

அவற்றில் ஒன்றுடன் ஈடுபட்டுள்ளனர் என்ற சந்தேகத்திலும் அவர்கள் பற்றி அறிந்தும் தகவல் கொடுக்கவில்லை என்ற சந்தேகத்தின் மீதும் தமிழ் இளைஞர்கள் பலர் ஸ்ரீலங்காவில்கைது செய்யப்பட்டு உள்ளனர்.

இப்படிக் கைது செய்யப்பட்ட தமிழ் இளைஞர்களில் பலர் குற்றம் சாட்டப்படாமலும் நீதிமன்ற விசாரணைக்கு உட்படுத்தப்படாமலும் நீண்ட காலமாக பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் பூஸா முகாமில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

வடக்கு,கிழக்கு மாகாணங்களில் விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்படும் தமிழர்கள் முதலில் உள்ளூர் முகாம்களில் அடைத்து வைக்கப்படுகின்றனர்.

சிலவாரங்கள், மாதங்கள் கழிந்த பின்னரே தென் பகுதியில் உள்ள பூஸா முகாமுக்குக் கொண்டு செல்லப்படுகின்றனர். இப்படிச் செய்வது அதிகரித்து வருகிறது.

தற்சமயம் ? ஆயிரத்து 500 க்கு மேற்பட்ட தமிழர்கள் பூஸா முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். குற்றம் சுமத்தப்படாமல், நீதி விசாரணைக்குட் படுத்தப்படாமல் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தினுல் அனுமதிக்கப்பட்ட ஆகக் கூடுதலான கால எல்லையானபதினெட்டு மாதங்களுக்கு மேல் சிலர் பூஸாவில் தடுத்துவைக்கப் பட்டிருக்கின்றனர்.

அவசரகாலச் சட்ட விதிகளின் கீழ் பதினெட்டு மாதங்களுக்குப் பின்னர் கைதிகள் கால வரையறையின்றித் தடுத்துவைக்கப்பட முடியும்.

அரசு வட்டாரங்களின்படி 1986இன் முடிவில் பயங்கரவாதந் தடுப்புச் சட்டத்தின் கீழ் 2 ஆயிரத்து 526 கைதிகள் சிறை வைக்கப்பட்டனர்.

சர்வதேச மன்னிப்புச் சபைக்குக் கிடைத்த தகவலின்படி 1987 ஜனவரி நடுப்பகுதியில் பூஸா இராணுவ முகாமில் மட்டும் 2,561 தமிழர் தடுத்து வைக்கப்பட்டனர்.

22-4-1977இல் வெலிக்கடை சிறையில் தமிழ்க் கைதிகள் சிங்களக் கைதிகளினுல் தாக்கப்பட்ட பின்னர் இந்த எண்ணிக்கை அதிகரித்தது. கொழும்பு பஸ் நிலைய குண்டு வெடிப்புச் சம்பவத்தில் 100க்கு மேலான பயணிகள் கொல்லப்பட்டனர்.

அதற்கு பதில் நடவடிக்கையாக வெலிக்கடைத் தாக்குதல் இடம் பெற்றது. அதைத் தொடர்ந்து பல தமிழர்கள் வெலிக்கடையில் இருந்து பூஸாவுக்கு இடமாற்றம் செய்யப்பட்டனர்.

(வளரும்)



### பொய்யாமொழி

**குறள்:**

கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்
குத்தொக்க சீர்த்த இடத்து.

**பொருள் :**

பொறுத்திருக்கும் காலத்தில் கொக்குப் போல் அமைதியாக இருக்க வேண்டும்; காலம் வாய்த்தபோது, அதன் குத்துப் போல் தவருமல் செய்து முடிக்கவேண்டும்.

## ஸ்ரீலங்கா பலம்பெற பண்டாரி பின்பற்றிய அணுகுமுறை காரணம்

''யுத்தம் இல்லாத வலிமை காட்டல்''— என்ற தலைப்பில் மனோஜ் ஜோஷி புரொண்ட்லைன் (ஜூன் 13–26) சஞ்சிகையில் எழுதிய கண்ணேட்டத்தின் முதல் பகுதி இங்கு பிரசுரமாகின்றது.

''இந்து. புரொண்ட்லைன்'' விசேட செய்தியாளராக மனோஜ் ஜோஷி இந்திய விமானங்கள் ஒன்றில் அண்மையில் யாழ்ப்பாணம் வந்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

''யுத்தம் இல்லாத வலிமை காட்டல்'' பற்றிய மறைமுக எண்ணம் பற்றி சர்வதேச பொது சனத் தொடர்பு சாதனங்களில் நிறைய எழுதப்பட்டாயிற்று.

ஜூன் 4 ஆம் திகதி இந்தியா காட்டிய உதாரணம் பற்றி எழுதப்பட்டதா என்பதை கண்டுபிடிப்பது கஷ்டமான காரியம்.

### ஆயுதக் காவலுடன் நடந்த ராணுவப் பணி

ஜூன் 4 நிகழ்ச்சி வலிமையைச் செயல் முறையில் தெளிவாக எடுத்துக் காட்டியது.

முற்றுமுழுதாக ஆயுதக் காவலுடன் நடந்த இராணுவப் பணி அது.

நிலைமையை ஒரு யுத்தமாக மாற்ருத விதத்தில் அது மிகவும் கவனமாகத் திட்டமிடப்பட்டது.

ஸ்ரீலங்காவில் இடம் பெறும் சிவில் யுத்தத்தை ஒருமுடிவுக்குக் கொண்டு வர இராணுவத் தலையீடு ஒன்றை 1984 ஏப்ரல் மாதத்தில் மேற்கொள்ள இந்தியா திட்டமிட்டிருந்தது.

அன்று தொடக்கம் ''செய் அல்லது செத்து மடி'' என்ற ரீதியில் கடந்த மே மாதம் ஸ்ரீலங்கா ராணுவம் நடத்திய தாக்குதல் வரை இந்தியக் கொள்கை நீண்ட காலப் பயணம் ஒன்றை மேற்கொண்டது. ஸ்ரீலங்கா அரசுக்கும் தமிழ்ப் போராளிகளுக்கும் இடையேயான மத்தியஸ்தப் பணியில் இருந்து விலகி விட்டது போலவும், இந்தியாவிடமிருந்து ஒத்தாசையையும் நிவாரணத்தையும் எதிர்பார்க்

( 1-ஆம் பக்கம் பார்க்க)

## சமய சந்நிதிகளில்

### வட்டுக்கோட்டையில்

வட்டுக்கோட்டை, ஜூன் 29

வட்டுக்கோட்டை விசாலாட்சி சமேத விசுவநாதப் பெருமான் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் கடந்த செவ்வாய்க்கிழமையன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது.

எதிர்வரும் வியாழக்கிழமை தேர்த்திருவிழாவும், வெள்ளிக்கிழமை தீர்த்தத்திருவிழாவும் நடைபெறும். (உ–161)

### அனலைதீவில்

அனலைதீவு, ஜூன் 29

அனலைதீவு சங்கரநாத கணபதிப் பிள்ளையார் கோயில் வருடாந்த மஹோற்சவம் கடந்த 2 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

எதிர்வரும் வியாழக்கிழமை தேர்த்திருவிழாவும் அடுத்தநாள் தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

பிரம்மஸ்ரீ சி. கோபால கிருஷ்ண குருக்கள் பிரதம குருக்களாக இருந்து உற்சவங்களை நடத்தி வைக்கிறுர். (உ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

YOUR FRIENDS IN FINANCE
SHABRA
நிதித்துறையில் உங்கள் நம்பிக்கையுள்ள நண்பன்
SHABRA UNICO FINANCE LTD.

# உதயன்

30-06-1987 செவ்வாய்க்கிழமை

YOUR FRIENDS IN FINANCE
SHABRA
நிதித்துறையில் உங்கள் நம்பிக்கையுள்ள நண்பன்
SHABRA UNICO FINANCE LTD.

## முஸ்லிம்கள் வரவேற்பு

யாழ்ப்பாணம், ஜூன் 30

பொம்மைவெளிக்கு நேற்று இந்திய செஞ்சிலுவைச் சங்கக் குழுவினர் சென்றபோது அவர்களுக்கு முஸ்லிம்களால் அமோக வரவேற்பளிக்கப்பட்டது.

பொம்மைவெளி பிரசவ விடுதிக்கு அண்மையில் கூடியிருந்த முஸ்லிம் மக்கள், ''ராஜீவ் வாழ்க'', ''எம். ஜி. ஆர் வாழ்க'', ''இந்தியா வாழ்க'' என கோஷமெழுப்பி உற்சாகமாக வரவேற்றனர்.

அத்துடன் தமிழ் ஈழப் போராட்டத்தை அங்கீகரியுங்கள், விடுதலைப் புலிகளை அங்கீகரியுங்கள் என்றும் அவர்கள் குழுவினரிடம் வேண்டுகோள் விடுத்தனர். (உ-10)

# வழமைக்குத் திரும்பாத வடமராட்சி

# முற்றாக அழிந்த வல்வை

## இந்திய அதிகாரிகள் அதிர்ச்சி

வடமராட்சி, ஜூன் 30

வடமராட்சிப் பகுதி சோபை இழந்து மயானமாகக் காணப்படுகிறது.

''ஒப்பறேஷன் லிபறேஷன்'' தாக்குதல்கள் வடமராட்சியில் முடிந்து இன்றுடன் சரியாக ஒரு மாதமாகி விட்டது.

இங்கு வயோதிபர்களும், தாய்மார்களுமே வீதிகளில் காணப்படுகிறார்கள்.

நெல்லியடி, கரவெட்டிப் பகுதிகளில் உள்ள சகல கடைகளும் முற்று முழுதாக மூடப்பட்டுள்ளன.

வாகன நடமாட்டமும் மிகவும் அரிதாகவே காணப்படுகிறது.

வீடுகள், கடைகள், சந்தைகள், சனசமூக நிலையங்கள், பாடசாலைகள் அனைத்தும் இடிபாடுகளுடன் காணப்படுகின்றன.

எரிந்த வாகனங்களும், உடைந்த வாகனங்களும் வீதியின் கரையோரங்களில் தள்ளிவிடப்பட்டுள்ளன.

இப்பொழுதும் வடமராட்சிப் பகுதி மக்கள் வாகன இரைச்சலைக் கேட்டதும் ஓடி ஒளிந்து மறைந்து கொள்கிறார்கள்.

### வல்வையில்

வல்வெட்டித்துறை நகரப் பகுதி முற்றும் முழுதாக அழிக்கப்பட்டுள்ளது.

இப்பகுதியில் ஒருசிறிய கட்டடம் தானும் முழுமையான தோற்றத்துடன் காணப்படவில்லை.

வல்வெட்டித்துறை நவீன சந்தை, தீயிட்டுக் கொளுத்தப் பட்டுள்ளதுடன் விமானக் குண்டு வீச்சுத் தாக்குதலுக்கும் இலக்காகி உள்ளது.

வீடுகள் கூட ஒன்றும் மிஞ்சவில்லை.

வல்வெட்டித்துறையில் உள்ள கிறீஸ்தவ ஆலயம் ஒன்று முற்று முழுதாக சேதமாக்கப்பட்டுள்ளது.

தபாற்கந்தோர், சனசமூக நிலையம், பாடசாலைகள், ஆஸ்பத்திரி அனைத்தும் தாக்குதலுக்கு இலக்காகி தரைமட்டமாகி உள்ளன.

மனித நடமாட்டமே இப்பகுதியில் இல்லை என்று கூறலாம்.

ஆனால் திடீர், திடீரென இப்பகுதிகளுக்கு இராணுவத்தினர் வந்து போகிறார்கள்.

இப் பகுதிகளை நேற்று பார்வையிட்ட செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதிகள் பெரிதும் அதிர்ச்சியடைந்து காணப்பட்டனர். [உ-10]

## இராணுவம் முகாமிட்ட பாடசாலைகள் குறித்து அதிகாரிகள் பேச்சு

வடமராட்சியில் இராணுவம் முகாமிட்டுள்ள மூன்று பாடசாலைகள் சம்பந்தமாக கல்வித் திணைக்கள உயர்குழு ஒன்று இராணுவ அதிகாரிகளுடன் பேச்சுக்கள் நடத்தியது.

யாக்குரி வித்தியாலயம், நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம், புலோலி மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை ஆகியவற்றில் தான் இராணுவம் முகாமிட்டுள்ளது.

இம் மூன்று பாடசாலைகள் மீண்டும் இயங்குவதற்கான ஒழுங்குகள் செய்யப்படும் வரை அருகில் உள்ள ஏனைய பாடசாலைகளில் மாணவர்கள் படிக்க ஒழுங்கு செய்யும்படி இராணுவ தரப்பினர் கல்வி அதிகாரிகள் குழுவைக் கேட்டுக்கொண்டனர்.

''அப்படிச் சென்று படிக்கும் மாணவர்களைக் கைது செய்யமாட்டீர்கள் என்று உத்தரவாதம் தர முடியுமா?''— என்று கல்வி அதிகாரிகள் குழு கேட்டுக் கொண்டதாம்.

அதற்கு, ''அப்படி ஏதும் நடைபெறாது. அப்படி மாணவர் எவரும் கைது செய்யப்பட்டால் 24 மணித்தியாலங்களுக்குள் விடுவிக்கப்பட்டு விடுவர்''— என்று இராணுவத் தரப்பில் பதிலளிக்கப்பட்டது.

(உ-எ-160)

## ஜலண்ட் பிரைட் திரும்பியது

சென்னை, ஜூன் 30

'ஜலண்ட் பிரைட்' சரக்குக் கப்பல் நேற்றுக் காலை 11-30 மணியளவில் சென்னைத் துறைமுகம் வந்து சேர்ந்தது.

வைஜந்திமாலா தலைமையில்

## சென்னையில் நேற்று உண்ணாவிரதம்

### ஈழத்தமிழருக்கு ஆதரவாக

சென்னை, ஜூன் 30

இலங்கைத் தமிழருக்கு ஆதரவு தெரிவித்து நேற்று சென்னை நகரில் உண்ணாவிரதம் நடந்தது.

இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த வட சென்னை எம். பியான திருமதி வைஜந்திமாலா பாலி இந்த உண்ணாவிரதத்தை ஒழுங்கு செய்ததுடன் அதற்குத் தலைமை வகித்து நடத்தினார்.

ஐந்நூற்றுக்கு அதிகமானோர் உண்ணாவிரதத்தில் கலந்துகொண்டனர். பெரும்பாலானோர் பெண்கள். (உ-எ)

## பாதுகாப்பும் - - - -

(1ஆம் பக்க தொடர்ச்சி)

நீங்கள் தரும் நிவாரண உணவும், உடையும் எமக்கு இப்போது முக்கியமானதல்ல. எமக்குத் தேவை பாதுகாப்பு. சுதந்திரத்துடன், மனிதர்களாக நாங்கள் வாழ வழி வேண்டும். இங்கு அது கிடையாது—

ஆகவே இந்தப் பொருள்களைக் கொண்டு வந்த கப்பல்களிலேயே எங்களை இந்தியாவுக்குக் கூட்டிப்போய்விடுங்கள் –

நாங்கள் இங்கு அனுபவித்த அவலங்கள் போதும், இனிமேலும் எம்மால் தாங்க முடியாது —

— இப்படி அகதிகள் இந்தியப் பிரதிநிதிகளிடம் முறையிட்டு அழுதனர்.

அவர்களைத் தேற்றும் வகையில் திரு. வேணுகோபால்கூறியதாவது:-

நீங்கள் அனுபவித்த கஷ்டங்கள் பல. பூஸா வரை சென்று நீங்கள் சித்திரவதைப்பட்டிருக்கிறீர்கள்;-

பொறுத்ததோடு சில தினங்கள் பொறுங்கள். மிகக் குறுகிய காலத்தில், உங்களுக்கு விடிவு பிறக்கும். நீங்களும் சுதந்திர மனிதர்களாக வாழ்வீர்கள். இது நிச்சயம் –

உங்கள்மீது இந்திய அரசின் பரிவு என்றும் உண்டு. ஆகவே உங்கள் துன்பங்கள் விரைவில் பறந்துவிடும். நம்பிக்கையுடன் இருங்கள் –

ஈழத் தமிழர்கள் சுதந்திரத்துடனும், பாதுகாப்புடனும் வாழ்வதற்கு விரைவில் வழி பிறக்கும் - என்றார்.

(அ-உ-10)

## 6 படையினர்---

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

சனை விடுவித்துவிட்டு முகாமுக்குள் பின்வாங்கினார்.

5.56 ரவைகள் ஐநூறு 7.62ரவைகள் இருநூறு, ஹெல்மட் மற்றும் தகரத்தில் அடைக்கப்பட்ட உணவுப் பொருள்கள் ஆகியவை எம்மால் கைப்பற்றப்பட்டன.

- இப்படி புலிகள் மேலும் தெரிவித்திருக்கின்றனர். (உ-)

## வானொலி ஒலிப்பதிவை குழப்பிய 'ஈழம்'

### வித்திக்கு ஏற்பட்ட அனுபவம்

யாழ்ப்பாணம், ஜூன் 30

''ஈழம்'' என்ற சொல் வந்தால் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன நிகழ்ச்சி ஒன்றின் ஒலிப்பதிவு வேலைகள் பலதடவைகள் நிறுத்தப்பட்டு தாமதிக்கப்பட்டன.

மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவா பற்றிய துணைவேந்தர் வித்தியானந்தனின் சொற்பொழிவு நிகழ்ச்சியே இவ்வாறு இடையில் தடைப்பட்டது.

இந்நிகழ்ச்சி சம்பந்தமாக துணைவேந்தர் வித்தியானந்தன்விபரிக்கையில்—ஒலிப்பதிவின் போது எனதுபேச்சில் அடிக்கடி 'ஈழம்' என்ற சொல் இடம்பெற்றது.

அப்போதெல்லாம் ஒலிப்பதிவு இடைநிறுத்தப்பட்டு ''இலங்கை'' என்ற சொல் சேர்க்கப்பட்டு தொடர்ந்து ஒலிப்பதிவு செய்யப்பட்டது—என்றார்.

மல்லிகை ஜீவாவின் 60 ஆவது மணிவிழா நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு பேசுகையிலேயே துணைவேந்தர் இதனைத் தெரிவித்தார். (இ-ள)

## ஜீ.சி.ஈ. உயர்-----

(1ஆம் பக்க தொடர்ச்சி)

முகாம் இட்டுள்ள சிப்பாய்களை அரசு வாபஸ் பெறவேண்டும்.

★ வடமராட்சி உட்பட சகல பிரதேசங்களிலும் கைது செய்யப்பட்ட ஆசிரியர்கள் மாணவர்கள் அனைவரும் உடன் விடுதலை செய்யப்படவேண்டும்.

★ பாடசாலை மாணவர்களை அதிபரின் அனுமதி இன்றி கைதுசெய்வது நிறுத்தப்படவேண்டும்.

★ பாடசாலை நேரங்களில் இராணுவத் தாக்குதல்கள் மேற்கொள்ளப் படக்கூடாது.

இக் கோரிக்கைகள் நிறைவேறும் வரை பரீட்சைகள் பகிஷ்கரிக்கப்பட்டு போராட்டம் தொடரும்.

மாணவர்களின் ஏகோபித்த பகிஷ்கரிப்பு முடிவை மீறி வெளிமாவட்டங்களுக்குச் சென்று பரீட்சைக்குத் தோற்றும் யாழ் பரீட்சார்த்திகள் துரோகிகள் எனக் கருதப்படுவார்கள் என்றும் மாணவர்களால் தீர்மானிக்கப்பட்டது.

ஆயிரக்கணக்கான மாணவர்கள், ஆசிரியர்கள் சிறையில் வதைபடும் இந்நேரத்தில் நாம் எமது முழு எதிர்ப்பையும் சர்வதேசத்திற்கு தெரியப் படுத்த வேண்டும்.

இதன் மூலம் அந்நாடுகள் ஸ்ரீலங்கா அரசை நிர்ப்பந்திக்கக் கூடிய அளவுக்கு இப் போராட்டங்களை முன்னெடுக்கின்றோம் — என்று இப் பொதுக் கூட்டத்தை ஒழுங்கு படுத்தியிருந்த அனைத்துக் கல்லூரி மாணவ முன்னணியினர் தெரிவித்தனர். (இ-ள)

## ஸ்ரீலங்கா...

(3ஆம் பக்க தொடர்ச்சி)

கும் தமிழரின் நிலை குறித்து அலட்சியமாகவும் இந்தியா நடந்து கொண்டமாதிரி அமைந்தது.

இதன் உச்சக்கட்டமாக மத்திய அரசின் உத்தரவின்மீது தமிழ் நாடு பொலீஸார் போராளிகளிடம்இருந்து ஆயுதங்கள், விமான எதிர்ப்பு ஏவுகணைகளை கைப்பற்றினர்.

இதற்கு முன்னர் மூன்று தமிழ்த் தலைவர்கள் இந்தியாவிலிருந்து நாடு கடத்தப்பட்டனர்.

இந்தியாவின் மென்மையான நிலைப்பாட்டை போராளிகள் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதற்காக மேற்கொள்ளப்பட்ட நிர்ப்பந்த நடவடிக்கைகள் இவை,

அமெரிக்காவின் உந்துதலில் இந்த அணுகுமுறையை 1985 மார்ச்சில் முன்னாள் வெளியுறவுச் செயலாளர் ரொமேஷ் பண்டாரி தொடக்கி வைத்தார்.

பண்டாரியின் அணுகுமுறையைப்பயன்படுத்தி இரண்டு ஆண்டுகளில் ஸ்ரீலங்கா அரசு இராணுவ பலத்தை அதிகரித்து வலுப்படுத்தியது.

(வளரும்)

## ஸ்ரீலங்கா சாக்குகளில் இருந்த பொருள்களை விநியோகிக்க மறுப்பு

யாழ்ப்பாணம், ஜூன்30

ஸ்ரீலங்கா அச்சுப்பதிக்கப்பட்ட சாக்குகளில் இருந்த அரிசி, மா போன்றவற்றை பொம்மைவெளி அகதிகளுக்கு வழங்குவதற்கு இந்திய செஞ்சிலுவைச் சங்கத்தினர் மறுத்து விட்டனர்.

நேற்று இப்பகுதி மக்களுக்கு நிவாரணப் பொருள்கள் வழங்குவதற்கென சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டு நிவாரணப் பொருள்களை வழங்குவதற்கு இந்திய செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதிகளும் அழைக்கப்பட்டிருந்தனர்.

உணவுப் பொருள்கள் ஸ்ரீலங்கா சாக்குகளில் இருந்ததைக் கண்டபோது இவர்கள் விநியோகிக்க மறுத்து விட்டனர். இவை இலங்கைப் பொருள்கள். நாளை (இன்று) வந்து இந்தியப் பொருள்களை வழங்குவோம் என்று உறுதி அளித்து விட்டு இவர்கள் சென்றனர். (இ-10)

## யாழ் செஞ்சிலுவை சங்கம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 30

யாழ் குடாநாட்டில் உள்ள நிலையான அகதிகள் முகாம்களுக்குப் பொறுப்பாக உள்ளவர்களை உடன் யாழ் செஞ்சிலுவைச் சங்கத்துடன் தொடர்புகொள்ளுமாறு சங்கச் செயலாளர் கேட்டுள்ளார்.

முகாமுள்ள உதவி அரசாங்க அதிபர் பிரிவு, கிராமசேவகர் பிரிவும் இலக்கமும், முகாம் அமைந்துள்ள இடம், குடும்பத்தலைவர் பெயர், ஒரு வயதுக்குட்பட்ட குழந்தைகள், ஒருவயதிற்கு மேற்பட்ட சிறுவர், வளர்ந்தோர், முகாம் பொறுப்பாளர் பெயர், விபரம் ஆகிய விவரங்களுடன் யாழ். வை. எம். சி. ஏ. கட்டடத்திலுள்ள செஞ்சிலுவைக் காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (இ-ள)

## நோயாளி- - - - -

(1ஆம் பக்க தொடர்ச்சி)

மராட்சிப் பகுதியில் நடந்த இராணுவத் தாக்குதல்களின்போது எரிகாயங்களுக்குள்ளான பலர் மந்திகை ஆஸ்பத்திரியில் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகின்றனர்.

நோயாளிகளில் பெண்களே கூடுதலாகக் காணப் படுகின்றனர்.

மந்திகை ஆஸ்பத்திரியிலும் மந்திகை ஆஸ்பத்திரியை அண்டியுள்ள பகுதிகளிலும் இராணுவத்தினரும் பொலீஸாரும் நிலைகொண்டுள்ளனர். (இ-10)

## நிவாரண உதவி தொடரும்

இந்தியாவில் இருந்து மேலும் நிவாரண உதவிப் பொருள்கள் யாழ் குடாநாடு வந்து சேரும்.

ஸ்ரீலங்கா அரசின் உடன்பாட்டுடன் இந்த உணவுப் பொருள்களை விரைவில் இந்தியா அனுப்பி வைக்கும்—

இப்படி கொழும்பில் இந்தியத் தூதரகப் பேச்சாளர் தெரிவித்தார் என்று கொழும்பு ஆங்கில நாளிதழ் 'த ஐலண்ட்' நேற்று செய்தி வெளியிட்டது. (இ-எ)

அறுபத்தோராம் (61ம்)நாள்

## நினைவு தினம் 01-07-1987

தேவவர்த்தினி (தேவா)
சிவஞானசுந்தரம்

அவனியிலுதயம்; 12 - 08 - 1970
சிவனிலடக்கம்: 02 - 05 - 1987



நின்னையொத்த மலரினி மலருமோ எமக்கிவ்வுலகில் சின்ன மகளே! சிறகடித்தேனோ பறந்தாய் வண்ணக் குருவியாய் வளையவந்து நீ செய்ததெல்லாம் எண்ணச் சிந்துது கண்ணீர் எம் துயர் ஆற்றுமோ கண்ணே உன்னுயிர் எம்பிரான் பாதகமலத்தில் தண்ணிழலில் சாந்தியடைய மனமுவந்து ஏத்துகிறோம்.

உம் பிரிவால் துயருறும்

அப்பா, அம்மா; சகோதரி, சகோதரன்மார்.
(ஏழாலை)

புன்னாலைக்கட்டுவன் வடக்கு,
புன்னாலைக்கட்டுவன். (1254)

## நீத்தார் பட்டியல்

### தம்பிஐயா நல்லம்மா

கந்தரோடை

தம்பிஐயா நல்லம்மா 29 - 06 - 1987ல் காலமாகி விட்டார். இவர் தம்பிஐயாவின் அன்பு மனைவியும், பரமேஸ்வரன் (A. C I. LTD. ஈவினை) அவர்களின் அன்புத் தாயாரும், இராசையா (C.T.B. கோண்டாவில்), பசுபதி-இராசமணி சிங்கராஜா (அரசினர் வைத்தியசாலை, தெல்லிப்பளை) ஆகியோரின் அன்புச் சகோதரியும், (காலம்சென்ற ஐயாத்துரை-சிங்கப்பூர், செல்லத்தம்பி-சிங்கப்பூர், இராசையாகந்தையா, ஊரெழு, செல்லம்மா,) இராசம்மா, திருநெல்வேலி, இராசரட்ணம்-இராசமணி-வவுனியா, துரைராஜா - மலேசியா. ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவர்.

அன்னாரின் ஈமைக்கிரியை 30-06-1987 காலை 10-00 மணிக்கு கந்தரோடை சங்கம் புலவு மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

தகவல்:
பா. ஞானஆனந்தன்

கந்தரோடை, சுன்னாகம். (3213)

## பிரயாண ஒழுங்குகள்

## ★ குவைத் ★

1. குவைத் நாட்டிற்கு Cleaning Labour ஆகச் செல்ல விரும்புபவர்கள் 01 - 07 - 87 க்கு பின் கீழ்வரும் ஆவணங்களுடன் சமுகம் கொடுக்கவும். வயதெல்லை 19 - 40
   1. PASS PORT
   2. PASS PORT PHOTO பிரதி
   3. GRAMA SEVAGA சான்றிதழ்
   4. PHOTO — 10

## KUWAIT

2. Marine Fitters 6 Years Experience
   1. In Marine Diesel Engines
   2. Compresosors
   3. Pumps
   4. Winches and Capstans
   5. Valves and Actuators
   6. Hydraulic Systems
   7. Trouble shooting and knowledge of spare parts

Duties 12 hours on. 24hours off.
Shift basics salary K. D. 65 p. m.
including food allowances free Accomadation (1 K. D- Rs. 105)

4. MOORING LABOURER: Strong armed experienced men to fasten ships with heavy Mooring rope

முக்கியகுறிப்பு:
★ குடா நாட்டில் வேறு பிரதிநிதிகள் இல்லை. யாபேரும் நேரடியாக தொடர்பு கொள்ளவும்.

தலைமை அலுவலகம்:

**Construction & Development Company Ltd.**

37, S. DE.S. JEYASINGHE MAWATHA
NUGEGODA.
Labour Licence No. 96

**V. P. பாலா**
(V. P பாலசுப்பிரமணியம்)
C/o V. பொன்னுத்துரை,
பாடசாலை வீதி,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில். 1444

இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேற்) லிமிடெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி: 30-06-1987.

Printed and Published by New Uthayan Publications (Pvt) Ltd at 292/2 Navalar Road, Jaffna on Tuesday June 30, 1987 Registered as a Newspaper at the General Post Office under number QJ/94/N/87

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org